

கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர்அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுரைபடியும், கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பின்படி 29.12.2024 அன்று தஞ்சாவூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.அண்ணாதுரை தலைமையில் மாவட்ட அமைப்பாளர் என்.ஆர்.சி.அறிவழகன் வரவேற்புரை ஆற்ற கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான், தலைமைக் கழக வழக்கறிஞர் நாகை மூ. தினேஷ்குமார் சிறப்புரையாற்ற வரும் 18.01.2025 அன்று நடைபெறும் வழக்கறிஞர் அணி 3வது மாநில மாநாடு குறித்து வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வழக்கறிஞர் அணி தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். வழக்கறிஞர் அணி 3வது மாநில மாநாட்டில் வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்துகொள்வோம் என தீர்மானம் நிறைவேற்றபட்டது.



கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார். உடன் சட்டத் துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், சபா இராஜேந்திரன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அருள்குமார், தலைவர் பாரி இப்ராகிம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# 2 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பை அரவை செய்ய திட்டம்!

## பெரம்பலூர் சர்க்கரை ஆலை அரவை பணியை தொடங்கி வைத்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

பெரம்பலூர், ஜன. 1 -

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், எறையூர் சர்க்கரை ஆலையின் அரவை பணியை போக்கு வரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் தொடங்கி வைத்து, சர்க்கரை ஆலை யினை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு , பெரம் பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் குன்னம் சி.ராஜேந்திரன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர்.

சர்க்கரை ஆலை அரவை பணியை தொடங்கி வைத்து, போக்குவரத்துத்துறை அமைச்சர் செய்தியாளர்களி டம் தெரிவித்ததாவது:-



பொதுத்துறை நிறுவன மான பெரம்பலூர் சர்க்கரை ஆலை தமிழ்நாடு அரசின் சர்க் கரை கழக கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர் களால் 1975 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1978 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. முன்னாள் முதல மைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 2010 ஆம் ஆண்டு எறையூர் சர்க்கரை ஆலையில் 18 மெகாவாட் இணைமின் உற்பத்தி திட்டம் துவங்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு முதல் இணைமின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 2024-25ஆம் ஆண்டிற்கான அரவை பருவம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள் ளது. கரும்பு அரவை 8.3.2025 வரை நடைபெற உள்ளது. 2 லட்சம் மெட்ரிக் டன் அள விற்கு கரும்பினை அரவை செய்திடவும் ஆலை சராசரி சர்க்கரை கட்டுமானம் 9.75% அளவிற்கு எய்திடவும் திட்ட மிடப்பட்டுள்ளது. தினசரி முழு அளவை திறனுடன் அரவை செய்திட நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் ஊக்கத் தொகையாக 2020-21 ஆம் ஆண்டிற்கு ரூ.192.50ம், 2021 22 ஆம் ஆண்டிற்கு ரூ.195ம், 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.195ம் 2023-24 ஆம் ஆண் டிற்கு ரூ.215ம் வழங்கப்பட் டுள்ளது.

கடந்த அரவைப் பருவத் தில் அரவை செய்த கரும்பிற் காக ரூ.71 கோடி கிரயத் தொகையாக வழங்கப்பட் டுள்ளது. மேலும் 2023-24 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 2.39 லட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவைக்காக 3,380 பயனாளிகளுக்கு ரூ.5.13 கோடி கரும்பு அரவைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் கரும்பு அரவையில் கூடுதல் இலக்கு எட்டப்பட்டு விவசாயிகளுக்கு அரவைத் தொகை வழங்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் கரும்பு பயிர் பரப்பு விரிவாக் கம் செய்திட சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கரும்பு விவ சாயிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்து அவர்களுக்கான நலத்திட்டங்களையும் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதனை விவ சாய பெருமக்கள் பயன்படுத் திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதில் எறையூர் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி ரமேஷ், மாவட்டக் கழக பொறுப்பா ளர் வீ.ஜெகதீசன், வேப்பந் தட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் க.இராமலிங் கம், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் முத்தமிழ்ச் செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கள் தழுதாழை.பாஸ்கர், மகா தேவி ஜெயபால்,

வேப்பந்தட்டை வட்டாட் சியர் மாயகிருஷ்ணன், எறை யூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயந்தி ராம்குமார் மற்றும் விவசாயிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், திருமானூர் கிழக்கு ஒன்றியம் சார்பில், கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம், அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி ஒன்றியக் கழகச் செயலாளர் இரா.கென்னடி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் நாத்திகம் நாகராஜ், கழக இளம் பேச்சாளர் ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் லதா பாலு மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.


